**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Deposition of Witness
Mcop 139/2023
ம..சா2 செல்வசுந்தரி

| | | |
|---|---|---|
| Name | : | செல்வசுந்தரி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 09.07.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 3ம்மனுதாரர் மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து அன்று என் அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு எத்தனை வருடமாக உடல் பாதிப்பு இருந்தது என்றால் 5,6 வருடமாக இருந்தது. என் அம்மாவிற்கு உடல் பாதிப்பு இருந்ததால் அவரால் எந்த வேலையும் பார்க்கமுடியாது என்றால் சரியல்ல. தையல் வேலை பார்ப்பார். என் அம்மாவிற்கு தையல் வேலை மூலம் வருமானம் வந்து என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா மீது தான் தவறு என நான் தான் என் அப்பாவிற்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் சிட்பெல்ட் அணிந்து பயணம் செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

சொல்லவில்லை. ஆனால் சிட்பெல்ட் அணிந்து சென்றோம். என் அப்பா ஓட்டிசென்ற காருக்கு கூடுதலாக பயணம் செய்யக்கூடிய பயணிகளுக்கு தனியாக காப்பீடு பெறப்படாததால் 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எங்களுக்கு எங்களது அப்பா தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.